பதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

௨

விரோதிவூ (1889) ஆவணிமீ உ௰௨ ஆரம்பமானது.

பத்திரக்கிரயம்.

வருஷம் ஒன்றுக்கு:

| | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம் | ரூ 5·00 |
| இங்கிலீசும் தமிழும் | 9·00 |
| இலங்கை இந்தியா | ரூ 8·00 |
| இங்கிலீசும் தமிழும் | 12·00 |
| ஐரோப்பாய்ப்பகுதி | ரூ 9·00 |
| இங்கிலீசும் தமிழும் | 13·00 |

முற்பண மனுப்பிஞ லன்றிக் கவனிக்கப்படா.

# இந்துசாதனம்.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க அனைத்தானும், ஆன்ற பெருமை தரும்".

விளம்பரவிகிதம்.

முதன் முறைக்கு:

| | |
|---|---|
| ஓரங்குலம் ரூபா | 10·00 |
| அரைக்கலம் ,, | 5·50 |
| கால்கலம் ,, | 4·00 |

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி.

☞ விளம்பரங்கள் முற்பண மனுப்பிஞ லன்றிக் கவனிக்கப் படா.

"சீர்பூத்த கருவிகர ணங்களோய்ந் தேங்கச் சிவம்பூத்த நிகமாக மங்களோங்கப், பார்பூத்த புறச்சமய இருள்களேங்கப் பரம்பூத்த சைவநெறியோர் தாங்கப், பேர்பூத்த வொளங்கதி னிசி துளங்கப் பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த, வார்பூத்த வறிவின்மை தொலிப்பமேயென் மேருமதம்பூத்த விநாயகன்றன் வணங்கி வாழ்வாம்"

"வாழ்க வந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல்லாம ரனாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே."

புத்தகம்—௫௫ } யாழ்ப்பாணம்:— ஸ்ரீமுகஞூ பங்குனிமீ ௧௩௨; ( 1934 மார்ஜ் 26 ) திங்கட்கிழமை. { இலக்கம்—௬௫.

## தெய்வச் செந்தமிழிலுந் திருத்தமா?

(19-3-34-ன் தொடர்ச்சி.

இறையனா ரகப்பொருளுரை அரங்கேற்றவைக்களத் தலைவர் முருகக்கடவுட் கூறிய உருத்திரசன்மரெனவும், அவர் நக்கீரனார் உரை கேட்குங்கால் சொற்றொறும் சொற்றொறும் இன்பக் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்ப்ப இருந்து மகிழ்ந்தார் எனவும், திருக்குற ளரங்கேற்றத்திலும் அவ் வுருத்திரசன்மர் திருவள்ளுவருடன் சங்கப்பலகையிடத்து ஒக்க இருந்து கேட்டு உவந்தனர் எனவும் உரைக்கிடக்கின்றன.

கல்லாடர் தாமியற்றிய 'கல்லாடம்' என்னும் நூலை மதுரேசர் சன்னிதியில் அரங்கேற்றிய ஞான்று, அந் நூற்பனுவல் ஒவ்வொன்றன் பொருளுரைத்து முடிவுற்றுழி தாம் ஒப்பியதற் கறிகுறியாகத் தமது திருமுடியசைத்து உவப்புற்றனர் என்பதை,

"கல்லாடர் செப்பனுவற் கல்லாட நூறநூல்
வலலார்சங் கத்தில் வதிந்தருளிச்—சொல்லாய்ந்த
மாமதுரை யீசர் மனமுவந்து கேட்டுமுடி
தாமசைத்தார் நூறுதரம்."

என்னும் செய்யுள் தெரிக்கின்றது.

திருக்குறளுக்கு இறையனார் முருகக்கடவுள் கலைமகள் ஆகிய கடவுளர்கள் சிறப்புப் பாயிரச் செய்யுட்கள் கூறியுள்ளார்கள் எனத் திருவள்ளுவமாலை தெருட்டுகின்றது.

"சமயக் கணக்கர் மதிவழி கூறாது
உலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன் றனக்கு வளர்கவிப் புலவர்முன்
முதற்கவி பாடிய முக்கட் பெருமான்."

என்னும் கல்லாடம் ஈண்டு கவனிக்கத்தக்கது.

சிவபெருமான் நக்கீரருடனும், முருகவேள் பொய்யாமொழிப் புலவருடனும் வாதிட்டனரெனவும், பொல்லாப்பிள்ளையார் நம்பியாண்டார் நம்பிக்குத் திருத்தொண்டத்தொகையின் பொருளருளிச் செய்தனரெனவும் வழங்கக் காண்கிறோம்.

சிவபெருமான் குமரவேள் இருவரும் தமிழ்ச்சங்கத் தலைமைப் புலவர்களாய் நூலாராய்ந்தார்களென்ப.

'நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி
நற்கனகக் கிழிதருமிக் கருளினோன் காண்'

எனத் திருநாவுக்கரையரும்,

"தருமொரு தொகுதித் தந்தை கிளையாய்
தாலோ தாலேலோ
சங்கத் தமிழின் றலைமைப் புலவா
தாலோ தாலேலோ."

எனக் குமரகுருபரரும் கூறிய கனிவுறு கனிகள்காட்டாகின்றன.

திருத்தில்லை மூதூரிற் சிவபெருமான் அந்தணருருக்கொண்டு எழுந்தருளி மணிவாசகரை யடைந்து அவர் அருளிய திருவாசகமாகிய தமிழ்மறையைத் தமது திருக்கரத்தால் ஏட்டிலெழுதி, "பாவை பாடிய உமது திருவாயால் ஒரு கோவைபாடுக" எனக்கேட்க, அவ்வாறே அவ்வடிகளருளிய திருக்கோவையாரையும் எழுதி, இங்ஙனம் மாணிக்கவாசகன் சொற்படி அழகிய திருச் சிற்றம்பலமுடையார் எழுதியது" எனக்கைச்சாத்திட்டு, கனகசபையின் பஞ்சாக்கரப்படியில் வைத்து மறைந்தருளினார் என்பர்.

"கடையூழி வருந்தனிமை கழிக்கவன்றே அம்பலத்தி
லுடையாருன் வாசகத்தில் ஒருபிரதி கருதினதே."

என்பது இவ் வரலாற்று முறைமை விசயமாக விளக்குகின்றது.

இன்னோரன்ன உண்மைவரலாறுகள் பலவற்றால், தெய்வடிவாய்த் திகழ்தல், தெய்வத்திருவாயிற் றோன்றல், தெய்வத்தால் அருளிச் செய்த நூல்களை யுடைமை, தெய்வத்தா லருளிச்செய்த திருப்பாசுரங்களுடைமை, தெய்வத்தால் முதலடி யெடுத்துக் கொடுக்கப்பெற்றமை, தெய்வங்கள் நூலரங்கேற்றவைகளைத் தலைமை வகித்து நூற்பொருட்டிறனறிந் தொப்பி யிசைந்தமை, தெய்வங்களருளிய சிறப்புப்பாயிரச் செய்யுட்களுடைமை, தெய்வங்கள் பற்பல சமயங்களிற் பலபுலவர்களுடன் உரையாலும் பாட்டாலும் உவந்து உசாவினமை, தெய்வங்கள் தலைமைப் புலவர்களாய்ச் சங்கமிருந்து நூலாராய்ந்தமை, தெய்வத்தின் திருக்கரத்தால் எழுதப் பெற்றமை ஆகிய செந்தமிழின் தெய்வத்தன்மை தெள்ளிதிற் புலனாகின்றது.

திரிபுரமெரித்த விரிசடைக்கடவுள், குன்றெறிந்த குமரவேள் ஆகிய தெய்வங்கள் அகத்தியர் தொல்காப்பியர் முதலிய முனிவர்கள், நக்கீரர் கபிலர் முதலான பொய்படிமையில்லாப் புலவர் மணிகள், சுந்தரர் சடகோபர் முதலான சைவ வைணவ சமயாசாரியர்கள், திருவள்ளுவர் சேக்கிழார் முதலிய தெய்வப் புலவர்கள், கம்பர் ஒட்டக்கூத்தர் முதலான கவிச் சக்கிரவர்த்திகள், பட்டினத்தார் தாயுமானார் சிவப்பிரகாசர் குமரகுருபரர் சிவஞான யோகிகள் முதலான சிவானுபூதிச் செல்வர்கள் பலரும்,

"என்றுமுள தென்றமி ழியம்பியிசை கொண்டான்."

என்றபடி காலவெல்லை கடந்த நம் தமிழ்மொழியைப் பசுகரண மொழிந்து பதிகரணமுடையராய்ப் பல்லாற்றானும் ஆய்ந்தாய்ந்து வரம்பிட்டு வைத்துள்ள இலக்கண வமைதி, உலகிலுள்ள வேறெம் மொழிக்கும் இல்லையென்பதை,

"கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோடமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமிழ் ஏனை
மண்ணி டைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா எண்ணவும்படுமோ."

என்னும் பரஞ்சோதியார் பனுவல் பசுமரத்தாணியென அறுதியிட்டு அறையாநின்றது.

ஒவ்வொருவரால்ஒவ்வொருகாலத்திற்பலவாறு விகாரமடையும் பிறமொழிகளைப் போலாது நம் தாய்மொழி எத்தகையோராலும் எள்ளளவுங் கூட்டவோ குறைக்கவோ மாற்றவோ இயலா மாண்புடைத்தாகும்.

தமிழெழுத்துக்களின் எண்ணிக்கையும், பெயர்களும், முறையும், பிறப்பும், வடிவமும், ஒலியளவும், அவ்வெழுத்தாலாம் சொற்களும், அவை புணரும் முறையும், அவை அறிவிக்கும் பொருள்களின் பெற்றியும் பிறவும், எழுவகை மதங்கொடு ஐயிரு குற்றமுமகற்றி அம்மாட்சியொடு எண்ணான் குத்தியினேத்துப்படலம் என்னும் உறுப்புக்களுடன் தோ ராநாவின் மேலோராகிய நல்லிசைப் புலவர்கள் பலரால், தொகை வகை விரியெனும் யாப்புற — போக்கற அமைக்கப்பெற்று விளங்குகின்றன. இத்துணைச் சிறப்பியல்பலவும் எம்மொழிக்கும் இன்மையாலன்றே, தமிழ் மொழி தனக்குத்தானே யிணையாகிய தனிமொழியாம் சதுரப்பாடுடையதாயிற்று. இதற்கு,

"ஒங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்."

என்னுந் தனிப்பாசுரம் உவமை விலங்கிச் சான்று கூறுகின்றது.

எழுகடல் நீரையும் உழுந்தளவாக அங்கையிற் கொண்டுண்டு ஏப்பமிட்ட அகத்திய முனிவரும், தமிழிலக்கண முடிபு காணத்தக்க ஓராசிரியனை நாடுவாரானால் சுகிர்ந்து பரந்த சொற்பரவைகளாலே யமைந்த தமிழ்மொழிக்குத் தண்ணிய கடலை உவமிக்க வொண்ணா தென்பதூஉம், அதன் இலக்கண முடிபு இறைவனுக்கும் ஒருகால் அளவிடற் கியலாதாயிற் றென்பதூஉம்,

"கடல்குடித்த குடமுனியுங் கரை காணக் குருநாடில்
தொடுகடலை யுனக்குவமை சொல்லுவதும் புகழாமே."

"ஒருபிழைக்கா அரனார்முன் உரையிழந்தனிழிப்பாரேல்
அரியதன இலக்கணமென் றறைவதும் புதமாமே."

(தொடர்ச்சி 3ம் பக்கத்தில்)

## இலங்கையும் பாராளுமன்றமும்.

—— (o) ——

### அரசாங்கசபையிற் கண்டனம்.

### பேஜ் கிருப்ற்றின் பிதற்றுரை.

சென்ற புதன்கிழமை பிற்பகல் அரசாங்கசபை கூடியபோது, இலங்கையைப் பற்றி சமீபகாலத்திற் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட விஷயமும் விளக்கப்பட்டது. மந்திரிமார் தலைவராகிய ஸேர்: டீ. பி. ஜெயத்திலகா அது சம்பந்தமாகப் பின்வருமாறு கூறினர்:—

"இலங்கைபோன்ற குடியேற்ற நாடுகளின் விஷயம் அதிகமாகப் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படுவதில்லை. ஆனால் இப்போது சிலகாலமாக இச்சிறு இலங்கையைப்பற்றி ஒருசிலர் பாராளுமன்றத்தில் விசேஷ சிரத்தை எடுக்கின்றனர். அவர்கள் இலங்கையின் நன்மைக்காக இவ்வாறு சிரத்தையெடுக்கவில்லை. ஆனால் எம் நாட்டின் அரசியல் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை யிடுவதற்காகவே இப்படியான விவாதங்களை நடத்தி வருகின்றனர்.

ஸேர்: ஹென்றி பேஜ் கிறப்ற் என்பவரும் லார்ட் ஸ்டிரபோல்கியும் இலங்கையைப் பற்றி அவதூறுகள் பல மொழிந்தனர். ஆனால் அவர்களின் கூற்றுக்குத் தக்க மறுமொழி பிரிட்டிஷ் மந்திரிகளாலும், தொழிற்கட்சி அங்கத்தவரான மிஸ்ரர் லன் அவர்களாலும் நன்கு கொடுக்கப்பட்டது.

"எனினும், நாம் சும்மாவிருக்கவொண்ணாது. இலங்கையைப்பற்றி அவதூறுகளை மொழிந்தவர்களின் கூற்று ஆதாரமற்றது, நீதியற்றது என்பதை நாம இந்த அரசாங்கசபை மூலமாகப் பிரிட்டிஷ் விஷமிகளுக்குக்கு அறிவித்தல் ஆவசியகமாகிறது.

"தமக்கு இலங்கையின் குறைகளை அறிவித்தவர்கள், இங்கேயேயிருந்து பழகியுள்ள ஐரோப்பியர் சிலரென்று சேர் ஹென்றி முதலாம் விஷமிகள் கூறுகின்றனர். ஆனால் நாம் அப்படி இலங்கைக்குப் பாதகமான ஒன்றையுங் கூறவில்லை எனப் பல ஐரோப்பிய சங்கத்தார் வெளியாகக் கூறியிருக்கின்றனர்."

### சாவகச்சேரிப் பொலிஸ் நீதிபதி.

சாவகச்சேரி, பருத்தித்துறைப்பகுதிப் பொலிஸ் நீதிபதியாயிருந்த மிஸ்ரர் ஏ. லீ. எம். ஹிங்கிலி என்பவர் தேசாதிபதியின் அந்தரங்கக்காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கின்றார். மேற்குறித்த பகுதிகளுக்குப் பொலிஸ் நீதிபதியாக வழக்கறிஞர் மிஸ்ரர்: ஸ்பென்ஸர் இராசரத்தினம் அவர்கள நியமிக்கப்பட்டிருக்கிறாரென்று அறிகிறோம்.

### இஞ்சி இறக்குமதியைத் தடுக்க

இலங்கையில் இஞ்சி உற்பத்தியாவதற்கான சாதனங்கள் இருந்தும் இந்தியாவிலிருந்து இறக்குமதியாக்கப்படும் இஞ்சியின் எதிரிடையினால், உள்ளூர் இஞ்சிக்கு மானமில்லாது விடுகின்றது. அதனால், உள்ளூர் இஞ்சி உற்பத்தியாக்குவோர் மிகுந்த கஷ்டமடைகின்றனர். இந்திய இஞ்சி இலங்கையில் இறக்குமதியாவதைத் தடுக்க இப்போது கைத்தொழில் வர்த்தக மந்திர நிர்வாக சபையார் ஆலோசித்திருக்கின்றனர் என்று அறிகிறோம்.

## 1000 பேர் மாண்டனர்!

——•——

### ஜப்பானுக்குநேர்ந்த விபத்து.

——(*)——

### ஓர் நகரத்தின் பெரும்பகுதி அழிந்தது.

ஜப்பானின் பிரதான பட்டினங்களுள் ஒன்றாய ஹக்கோடற் என்னும் நகரத்திற் சென்ற புதன்கிழமை ஓர் அக்கினி விபத்து ஏற்பட்டதால், ஆங்குள்ளவர்களில் 1000 பேர் வரை மாண்டனர் என்று சென்ற வெள்ளிக்கிழமை வந்த செய்தி ஒன்று கூறுகிறது.

மேற்படி நகரத்தில் உள்ள 27 தெருக்களுள் 24 தெருக்கள் சாம்பரால் மூடப்பட்டிருக்கின்றன 1 லட்சத்து 50 ஆயிரம் ஜனங்கள் வீடுவாசலின்றித் தவிக்கின்றனர் பல பொதுநிலையங்களும் அரசாங்கக் கட்டடங்களும மண்ணோடு மண்ணாயின. ஹக்கொடேற் நகரத்தின் சனத்தொகை 1லட்சத்து 97ஆயிரமே.

### தெருவோரங்களில் மரம் நடுதல் வேண்டும்.

சென்ற செவ்வாய்க்கிழமை நிகழ்ந்த அரசாங்க சபைக் கூட்டத்தில் கண்டிப் பிரதிநிதியான மிஸ்ரர்: ஜோர்ஜ் இ டீ. சில்வா என்பவர் பின்வருந் தீர்மானத்தை எடுத்தாளப்போவதாக அறிவித்தல் கொடுத்தார்:—

"இலங்கையின் தெருவோரங்களிற் பயனுள்ள பழமரங்களையும், ஏனைய மரங்களையும் நடுதல் வேண்டுமென இச்சபை அபிப்பிராயப்படுகிறது."

### "சாவதானமாயிருக்க."

"சைக்கிள்" எனப்படும் துவிச்சக்கரவண்டிக் களவுகள் இப்போது சில காலமாகக் கொழும்பில் மிக முர்முரமாக நடைபெற்று வருகின்றன. பொலிசார் பலகள்வரைச் சிறைப்படுத்தியும் துவிச்சக்கரவண்டிக் களவுகள் ஒய்ந்தபாடில்லை. எனவே, அவற்றைத் தெருவோரங்களிலோ, வீட்டின் வெளிப் பக்கங்களிலோ விடவொண்ணாது; துவிச்சக்கரச் சில்லைப் பூட்டிவிடல் வேண்டும் என்று கொழும்புப் பொலிஸ் அதிகாரியான மிஸ்ரர் ஜே. ஆர். ஜி. பாங்ரொக் ஓர் அறிவித்தலைப் பத்திரிகைகளுக்கு விடுத்திருக்கிறார்.

### பாராளுமன்றத்திற் பின்னும் கேள்வி.

1934 ம் ஆண்டு ஜனவரிமாதம் தொடக்கமாக, இற்றைவரை இலங்கைத் தேசாதிபதி தமது யதேச்சாதிகாரத்தின்படி எத்தனை முறை சட்டமியற்றினாரென சேர் ஹென்றி பேஜ்கிறுப்ற் என்பவர் குடியேற்றநாட்டுமந்திரியை வினவினார் செலவுப்பணம் அனுமதிப்பதற்காகத்தேசாதிபதி4முறை மாத்திரமே தமது யதேச்சாதிகாரத்தை உபயோகித்தார் என்று மேற்படி மந்திரி விடையளித்தார்.

### லீவு கேட்கிறார்!

இலங்கை அரசாங்கசபைத் தலைவரான மிஸ்ரர் ஏ. எவ். மொலமூரே தமக்கு 6 மாத லீவு உதவவேண்டுமென்று, பிரதித் தலைவர் மூலமாக அரசாங்கசபையைச் சென்ற வெள்ளிக்கிழமை கேட்டார். அவர்க்கு லீவு கொடுக்கலாம் என்று மந்திரிகள் தலைவராகிய சேர். டீ. பீ. ஜெயத்திலகா பிரேரித்தார்.

மிஸ்ரர். ஜீ கே. டபிழ்யூ. பெரீரா:-"இவர் லீவு கேட்பதற்கு ஏதும விசேஷகாரணங்கள உளவோ?" என்று கேட்டார். எனினும் பின், மிஸ்ரர் மொலமூரே கேட்டவாறு லீவு அளிக்கப்பட்டது.

# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: ஸ்ரீமுகவஸ்ரு
பங்குனிமீ ௧௩௨ திங்கட்கிழமை.


## உற்சவங்கள்

இந்தப் பங்குனி மாசந் தோடக்கம் வருகிற புரட்டாதி மாசம் முடியவுள்ள மாசங்களிலேயே யாழ்ப்பாணத்திலுள்ள கோயில்களிற் பெரும் பான்மையும் மகோற்சவங்கள் நடை பெறுகின்றன. நமது யாழ்ப்பாணத்திலே திருவிழாக்களின் பொருட்டுப் பெருந்தோகையான பொருள் ஊரவர்களாற் செலவிடப்படுகின்றதென்பதுமெய்; ஆனால் இந்த உற்சவங்கள் சில கோவில்களில் தவிர ஏனைய கோவில்களில் கிரமமாக நடக்கின்றனவோ, அவற்றின் பொருட்டுச் செலவிடப்படும் பொருள் நன்மை பயக்கும்படி செலவிடப் படுகின்றதோ, உற்சவங்களால் அன்பர்கள் அடையவேண்டிய பலன்களை அடைகின்றார்களோ என்று இவைகளை யிட்டு நினைக்கும் போது விஷயமறிந்தவர் எவரும் சிந்தை வருந்த வேண்டியே நேர்கின்றது.

யாழ்ப்பாணத்திலுள்ள அனேக கோயில்களில் நடக்கும் மகோற்சவங்கள், தாசியர் நடனம், வாணவேடிக்கை, அகாலத்தில்நடத்தல் வேடிக்கை வார்த்தை, வீண்செலவு முதலாய பல தவறுகளோடு கூடியுள்ளன. இப்படியான உற்சவங்களினால் நன்மையைக் காட்டிலும் தீமையே அதிகப்படுமெனக் காணப்படுதலால், இவ்வுற்சவங்கள் நடப்பதிலும்பார்க்க நடவாதொழிதல் நன்மையென்று சொல்லலாம். குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கோள்வதைக் காட்டிலும் குளிக்கப் போகாமலிருத்தல் நல்லதல்லவா!

கோயிலதிகாரிகள் உற்சவ ஆசாரியராயுள்ளார் உபயஞ்செய்வோர் என்னும் இந்த மூன்று பகுதியாரும் ஒருமித்து வீண்செலவுகளையும் தவறுகளையும் தவிர்த்து விதிப்படி பத்தி சிரத்தையோடு இந்த உற்சவங்களைச் செய்யவொண்ணாதா? இங்குள்ள மிகச் சில கோயில்களிலே திருவிழா முடிவில் ஆடு கோழிகளும் பலியிடப்படுகின்றனவே இவைகளைக் கண்டு கண்டு உற்சவத்திற்குச் செல்வோரும் ஆகாரமில்லாமல் மற்சமாமிசம் மது என்னுமிவைகளை அருந்தி விட்டுக் கோயிலுக்குப்போய், அங்கு பல அக்கிரமங்களைச் செய்பத்தலைப்பட்டுக்கோண்டார்களே! கிரமமாக உற்சவம் நடத்தப்படும் கோயில்களுக்கு உற்சவதரிசனத்தின் பொருட்டுச் செல்வோர் இன்றும் ஆசாரசீலராய்ப் பத்தி சிரத்தையோடுதானே வந்து உற்சவதரிசனம் செய்துகோண்டு போகிறார்கள். இதற்கு உதாரணமாக நல்லூர்க் கந்தசுவாமிகோவில் மகோற்சவத்தை நாம் எடுத்துக்காட்டலாமல்லவா! அங்கே உற்சவம் நடக்கும்போது பல்லாயிரக்கணக்கானோர் விரத மனுஷ்டித்தல்லவா உற்சவ தரிசனம் செய்கிறார்கள் இன்னும் இப்படியான சில கோவில்களும் உற்சவங்களும் உண்டென்பது மெய். ஆனால் பெரும்பான்மையான கோவில்களில் திருவிழாக்கள் பழைய நோக்கத்திற்கும் கொள்கைக்கும் மாறாகத்தானே இன்னும் நடைபெறுகின்றன. இத்தவறுகளைத் தவிர்த்து உற்சவத்தைப் புனிதமாக்குவதற்கு நாம் மேலே சொன்ன மூன்று பகுதியாருடைய ஒற்றுமையும் முயற்சியும் ஆவசியகம் வேண்டும்.

இந்த முப்பாலாரும் தத்தம் கோவில்களில் தாசியர் நடனம், வாணவேடிக்கை, பகற்றிருவிழா இரவிலும், இராத்திருவிழா பகலுமாக அகாலத்தில் நடத்தல், பலிவெட்டுதல் நடக்கும் கோவிலில் அப்படிப் பலிவெட்டுதல் ஆகிய இவைகளை அறவே அகற்றிவிட முயற்சிசெய்தல்வேண்டும். இவ்வகையான அநர்த்தங்களின் பொருட்டு அநியாயமாகச் செலவிடும் பொருளை சற்பிரசங்கம், கதாப்பிரசங்கம், அன்னதானம், கோயில் நித்திய பூசை, முட்டின்றி நடத்தல் திருப்பணியென்னுமிவைகளின் பொருட்டுச் செலவிடலாகுமே. தாசியர் நடனம் நடக்கும் நேரத்தில், அதனைத் தவிர்த்து விஷயமறிந்தவர்கள் பத்திசிரத்தையுடையவர்கள் சங்கீதம் வல்லுநர் ஆகிய இவர்களைக்கொண்டு கதாப்பிரசங்கம் வசனப்பிரசங்கம் செய்வித்தற்கான ஒழுங்குகளைச் செய்யலாமே திருவிழாத் தரிசிக்கவரும் ஆண்பாலார் பெண்பாலார் எல்லாரும் இவற்றாற் பயனடைவால்லவா. சங்கீத கதாப்பிரசங்கத்தை ஆலயங்களிலே செய்விப்பவர்கள் வைஷ்ணவ மதத்தைக் கொண்டவர்கள், மற்சமாமிசம் புசிப்போர், போதனையொன்று சாதனை பிறிதொன்றயுள்ளவர் என்னுமிவர்களைக்கொண்டு செய்வித்தல் பொருந்தாதாகும். போதிப்போர் செய்வன எவையும் பத்திபூர்வமாகவும் புத்திபூர்வமாகவும் செய்யப்படினே அவை கேட்போர் உள்ளத்திலும் பசுமரத்தாணிபோற் பதியும். நிற்க, கோயிலதிகாரிகளும் உற்சவாசாரியர்களும் உபயஞ்செய்வோரும் இந்த வருடந் தொடக்கமாகவேனும் மேலே சொல்லப்பட்ட விலக்குக்களை யொழித்து விதிகளைக் கைக்கொண்டுசெய்து ஈடேறுவார்களாக.

---

## இந்திய தேசீயமகாசபை.

பாரத நாட்டு மக்களின் பிரதிநிதியாய் விளங்கும் ஸ்தாபனமாய அகில தேசியக் 'காங்கிரஸ்' எனப்படும் மகாசபை விலிங்டன் அரசினர் செய்துவரும் அக்கிரமத்தாலும் அடக்கு முறையாலும் இப்போது வெளித்தோற்றத் தளவிலேனும் வலிமை குன்றி இருக்கிறதென்பதை நாம் ஒத்துக்கொள்ளவேண்டும். பொதுஜன சட்டமறுப்பியக்கம் நிறுத்தப்பட்டுத் தனிப்பட்டவர்களின் சட்டமறுப்பே இப்போது நடக்கின்றது. இதனாற் தேச முன்னேற்றத்திற்கான பயன் ஏதும் கிடைக்குமோ என்பது சந்தேகமே. இதற்கிடையில், வகுப்புவாதிகளும் பதவிவேட்டுவரும் சுயநலங் கருதித் தாமே பொதுஜனப்பிரதிநிதிகள் என்று கிளம்பி பிரிட்டிஷ் அரசினர் அளிக்கவிருக்கும் வெள்ளை அரசியலில் நிர்மாணிக்கப்படும் சட்டசபைகளைக் கைப்பற்றக் கங்கணம்கட்டி நிற்கின்றனர். இச்சமையத்தில், பாரதமக்களுக்கோர் வழிகாட்டியாக இதுகாறும் இருந்து சுவதந்திரப்போரை நடாத்திவந்த மகாசபை செய்ய வேண்டியதென்ன? தனிப்பட்டவர்களின் சட்டமறுப்பை மாத்திரம் நடத்துவதா? பச்சோந்திகளும், பதவிவேட்டுவரும், வகுப்புவாதிகளும் சட்டசபைகளைக் கைப்பற்ற விடுவதா? அன்றேல் சட்டசபைகளைக் கைப்பற்றி அவற்றிற்குள் இருந்தே பிரிட்டிஷ் சிங்கத்தை ஆட்டி அடக்கி, தேச முன்னேற்றத்திற்கானவைகளைச் செய்து பூரண சுவதந்திரத்தைப் பெறுவதா?

இது விஷயத்தில் தேசீயமகாசபையினர்க்குள் இப்போது அபிப்பிராயபேதம் உளது; தென்னாட்டு ஸ்ரீ சத்திய மூர்த்தியவர்கள், டெல்கிப் பிரபல பரிஸ்டர் அஸாப் அலி, பம்பாய் ஜமுனாதாஸ் மேத்தா முதலியோர் பழைய சுயராச்சியக் கட்சியைப் புநருத்தாரணஞ்செய்து சட்டசபைகளைக் கைப்பற்ற வேண்டுமென்கின்றனர்; டக்டர் அன்சாரி போன்றவர்கள், இதனால் ஆம்பயன் ஒன்றுமில்லை, மகாத்மா காந்தியடிகள் கூறியபடி தேசோத்தாரண வேலைகளில் காங்கிரஸ் வாதிகள் ஈடுபடவேண்டுமென்கின்றனர். ஸ்ரீ கே. எவ். நரிமான் முதலியோர், அகில-இந்திய தேசீயமகாசபையைக் கூட்டி அதில் இவ்விஷயங்கள் ஆலோசிக்கப்படல் வேண்டும் என்கின்றனர்: பின்னையோர் கூற்று நீதியானதென்பதே எனது அபிப்பிராயம்; கூட்டப்படும் மகாசபையில் சட்டசபைப் பிரவேசத்தைப்பற்றிய விவாதமும் மிக மும்முரமாக நடைபெறும் என நம்புதற்கு இடமுண்டு; சட்டசபை ஸ்தானங்களைக் கைப்பற்றுவதில் மகாத்மாவுக்கும் இப்போது ஆட்சேபமில்லையெனத் தெரிகிறது; எனவே, கூடப்போகும் மகாநாட்டில் சத்தியமூர்த்தி கட்சியாருக்கு வெற்றி கிடைக்குமென்று திடமாய்க் கூறலாம்; காங்கிரஸ் முன்போல, சட்டசபைகளைப் பகிஷ்கரிக்குமாயின், கஸ்னவி, ஸபாருல்லாகான் ஆகாகான், மூஞ்சி முதலாம் வகுப்புவாதிகளும், சர்மா, ராஜாபகதூர் கிருஷ்ணமாச்சாரியர், டற் முதலாம் பிற்போக்காளர்களும் எம். கே. ஆச்சாரியா, சண்முகம் செட்டி முதலாம் பச்சோந்திகளும் அவற்றிற் புகுந்து, பிரிட்டிஷார் கூறுவனவற்றிற்கியைந்து, தேச நட்டத்திற்கான சட்டங்களை இயற்ற உதவி செய்வார்கள் என்பதற்கு ஐயமின்று.

## குறிப்புக்கள்.

—:o:—

### பைத்தியமா?

இற்றைக்குச் சில நாட்களுக்குமுன் பாராளுமன்றத்தில் இலங்கையைப்பற்றி அவதூறு மொழிந்த சேர் ஹெக்ரிபேஜ் குரொப்ற் என்[illegible] வெள்ளை மனிதனின் பிரசாரணத்தின் முழு விவரமும் இப்போது எமக்குக் கிடைத்திருக்கின்றது அதனை ஊன்றிப் படிக்கும் எவரும் இந்தப் பேஜ் குரொப்ற் பைத்தியம் பிடித்தவரோ என்றே எண்ணவேண்டி ஏற்படும். இலங்கை "அரசாங்கசபை அங்கத்தவர்கள் கடன்காரர் சகாய மசோதாவை, எல்லோருமாகச் சேர்ந்து உற்சாகமாய் நிறைவேற்றினார்" என்று கூறினார் இந்த குரொப்ற். ஆனால் ஷெ மசோதா அப்படி "எல்லோராலும்" "உற்சாகத்துடன்" நிறைவேற்றப்படவில்லை. மும்முரமான விவாதத்தின்பின் ஒரு வாக்குச்சம்மதக் கூடுதலினாலேயே நிறைவேறியது. இன்னும் இலங்கையின் வரவு செலவுத் திட்டத்தில் வரவுக்கு மிஞ்சிய செலவு, 85000000ரூபா என்று கூறினார்! என்னே பேதமை! இலங்கையின் முழு வருமானமும் அவ்வளவு ரூபாதானே! ஐயோ! இந்தப் பேஜ் குரொப்றின் மனப்பான்மை என்னென்று கூறுவது.

"சொல்லாது சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுத்தும்—நல்லாய்
மணலுள் மூழ்கி மறைந்து கிடக்கும்
ஞணலுந் தன் வாயாற் கெடும்."

என்ற மூதுரைக்கிலக்காய் விளங்குகிறார் இந்த முழுமகன்.

---

### 4695 பேர்!

இந்த இலங்கையிற் பிறந்து இலங்கையில் வளர்ந்து அதன் கட்டளைகளிற் பங்குபற்றும மக்களிற் பல்லாயிரக்கணக்கானோர் வேலையில்லாத் திண்டாட்டத்தால் வாடுகின்றனர்! பட்டினியால் இறக்கின்றனர்! ஆனால், மாதா வயிறெரிய மகேசுரபூசை செய்தவன் போலாக, நமது காருண்ணிய அரசினர் 4695 அந்நிய உத்தியோகத்தருக்கு வருடந்தோறும் நமது பணத்தை வாரி வாரி யிறைக்கின்றனர் என்றால் யாம் கூறுவது என்ன? இலங்கைமக்களிற் பலர், இந்த அரசினரை நம்பி ஆங்கிலங் கற்றுத் தெருத் தெருவாய்த் திரிகின்றனரே! இவர்களின் வறுமையை நீக்க அரசினர் மனத்தில் நினையாது, உதாசித்தனமாக, இந்த அந்நியரை வைத்துப் பணம் இறைப்பதன் நியாயமென்ன என்று கேட்கிறோம்? அவர்களின் இடத்திற்குத் தகுதி பெற்ற இலங்கையர் இல்லையா? இருக்கின்றனர் என்றே அரசினர் கூறுகின்றனர்! உத்தியோகத்தில அமர்ந்திருப்பவரை நீக்க வொண்ணாது என்பதா அரசினர் கூறும் சமாதானம்? அப்படியெனில், மலாய்நாட்டரசினர் உத்தியோகத்தர்க்ளவரும இலங்கையரைக் கப்பலேற்றி மலாயருக்கு அந்த உத்தியோகங்களை அளிக்கின்றனரே! தன்னைக்கண்டு தருமஞ்செய்க என்னும் வாக்கியத்தை மேது அரசினர்க்கு ஞாபகமூட்டுகிறோம்.

---

### யாழ்ப்பாணம் சங்கீதவித்துவானுக்கு மதிப்பு.

யாழ்ப்பாணத்துத் தவில் வித்துவானாகிய ஸ்ரீ N. காமாட்சிசுந்தரம் அவர்கள் திருவீழிமிழலை பிரபல நாகஸ்வர வித்துவான்களாகிய சுப்பிரமணியம் சகோதரரால் அழைக்கப்பட்டிருக்கிறார் என்று சந்தோஷமுறுகின்றோம். யாழ்ப்பாணத்துள்ள ஓர் சங்கீதவித்துவானைத் தமுடன் பங்குபற்றும்படி இந்திய சங்கீத வித்துவான்கள் அழைத்தமை இதுவே முதன் முறையாகும் என்பது எடுத்துக்குறிப்பிடத்தக்கது ஸ்ரீ காமாட்சிசுந்தரத்தின் வயது 25 மாத்திரமே! இவ்விளமவயதில், இவர் பாரதநாட்டிலுள்ள மிகப் பிரபல ஓர் சங்கீதக் கோஷ்டியினரால் அழைக்கப்பெற்றமை யாழ்ப்பாணத்திற்கே ஓர் பெரும் சௌரவமாகும். ஸ்ரீ காமாட்சிசுந்தரம் சங்கீதத்திற்குத் தாயகமாகிய பாரதநாட்டிலேயே பல பரிசில்களை பெற்று மீண்டும் தம் தாய்நாட்டிற்குச் சுகமே மீள இறைவன் அருள பாலிப்பாராக.

---

### தனுதிகாரிக்கு மாறாக வழக்கு.

ஏழாலையில் ஆசிரியராகவுள்ள ஸ்ரீ வீ. ஜே அமிர்தவாசகமென்பவர், தெல்லிப்பழை மிஷன் ஐக்கியசங்கத்துத் தனுதிகாரியாயுள்ள மிஸ்டர் வீ. ஆர். முருகேசனென்பவர் அச்சங்கத்துக்குரிய பணத்தை அபகரித்தார் என்று மல்லாகம் பொலிஸ் நீதிஸ்தலத்திற் குற்றஞ்சாட்டினார்.

இன்றைய தேதிக்கு வழக்குத் தவணையிடப்பட்டிருக்கிறது.

## மாகாணத் தலைவர் மோட்டர் விபத்து.

———x———

### சந்தேகநிவிர்த்திசெய்வாரா?

சென்ற (12-3-34) பருத்தித்துறைப் பகுதியைச்சேர்ந்த புலோப்பழை யென்னும் இடத்தில் வடமாகாணத் தலைவராகிய மிஸ்டர்: ஸட்மன்ட் ரைட்சிங்கோ என்பவர் தமதுமோட்டாரில்வரும்போது, வயதுமுதிர்ந்தஓர்கிழவனைத்தட்டிவீழ்த்திவிட்டாரென்றும், பின் 19-3-34-ல் அக்கிழவன் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் உயிர்துறந்தானென்றும பத்திரிகைகள் வாயிலாக அறிந்தோம். இப்படியான மோட்டர் விபத்துக்கள இப்போது சிலகாலமாக நம்நாட்டில் விருத்தியாவதைத் தடுக்க எமது பொலிசார் என்செய்கின்றனரோ அறியேம! நிற்க, ஆஸ்பத்திரியில் இறந்த கிழவன் மோட்டர் விபத்தில் இறக்கவில்லை, அவனுக்கு இதற்கு முன்னரேயிருந்த நோயின்காரணமாகவே இறந்தானென்று மரண விசாரணை புரிந்த டக்டர் மிகச் சுலபமாகக் கூறிவிட்டார் என்று இப்போது தெரியவருகிறது. ஆனால், நாம் அரசினரை ஒன்றுகேட்க விரும்புகிறோம்! ஓர் சாதாரண மனிதன், இப்படிப்பட்ட மோட்டர் விபத்திற்குக் காரணமாயிருந்தால் இவ்வளவு சுலபமாகத் தப்பிவிடமுடியுமா? மாகாணத் தலைவரின் சாரதித்தியத் திறமையை அதிகாரிகள் பரிசோதனை செய்தனரா? அவர் மோட்டர் ரதத்தைச் செலுத்த வல்லவர், அவருடைய ரதம் பிழையற்றது என்பதைப்பற்றித் திர்க்கமாக அறிந்தார்களா? இவற்றைக் கூறுவதனால், எமது மாகாணத் தலைவர்மீது நாம் குற்றம் கூறுகின்றோமென எவரும் விபரீதமாக விளங்கிக்கொள்ள வொண்ணாது. எமது அதிபர் என்றநியதியில், அவர்மாட்டுள்ள எமவிசுவாசம் ஒருபோதும குறைவுபடப்போவதில்லை. ஆனால், இதுவிஷயத்தில் நீதி செலுத்தப்படவேண்டுமென்பதை அவரும் ஒத்துக்கொள்ளுவார். மேலே காட்டப்பட்ட கேள்விகள் சம்பந்தமாகப் பல சந்தேகங்கள் ஊரவர்மனத்திடை நிகழக் கூடுமாதலின் அவற்றை அதிகாரிகள் நிவிர்த்தி செய்வார்கள் என்ற எண்ணத்துடனேயே இதனை வரையலானேம" என சாவகச்சேரியிலுள்ள "பொதுநன்மை விரும்பி" ஒருவர் எமக்கு எழுதுகிறார்.

---

### வரிமறுப்பியக்கமா?

மத்திய ஏழாலையைச் சேர்ந்த ஒரு கூட்டத்தார், சிலநாட்களுக்கு முன் ஓர் கூட்டம் கூடி, கிராமச் சங்கத்துக்குக் கொடுக்க வேண்டிய வரிப்பணம் கொடுப்பதில்லை யென ஓர் தீர்மானஞ் செய்திருப்பதாக அறிகின்றோம். காரணம் தங்களபகுதியில் கிராமச்சங்கத்தார் செய்ய வேண்டிய கடமைகளைச் சரிவரச் செய்யவில்லையென்று கூறப்படுகிறது.

---

### 11,000 ரூபா மோசடி வழக்குத் தள்ளப்பட்டது.

சென்ற சிலநாட்களின் முன்னர் யாழ்ப்பாணம் அப்துல் உசேன் ஜுவலேர்ஜி என்பவர்களின் கடையிலிருந்து கொழும்புக்குக் கொண்டு சென்ற 30,000 ரூபாவில் 11,000 ரூபாவரை மோசடி செய்ததாகக் குற்றஞ் சாட்டப் பட்டிருந்த கோமதி நாயகம் பிள்ளையும் பின்னர் சிறையாக்கப்பட்ட அருணாசலபிள்ளை முதலியோரும் விடுதலை பெற்றனரென அறிகின்றேம்.

---

### இந்தியாவும் இலங்கைத் தேங்காயும்.

"இலங்கையில் இருந்து இந்தியாவில் இறக்குமதியாக்கப்படும் கொப்பரா மீது இந்திய அரசினர் அதிகமான பாதுகாப்பு வரியை விதிப்பார்களானால், இந்தியாவில் இருந்து இங்கே இறக்குமதியாகும் எப்பொருள்கள் மீதும் அதிகமானவரியை விதிக்க வேண்டுமென நாம் எமது அரசினரைக் கேட்க வேண்டும்" என ஸ்ரீ மான். R ஸ்ரீ. பத்மநாதன் அவர்கள் சென்ற சனிக்கிழமை கூடியகிழ்நாட்டு விளைபொருட் சங்கமகா கூட்டத்திற் பேசினார். இன்னும் அவர் கூறியதாவது:—

"எண்ணெய் உற்பத்தியாக்குதற்காக இனி தேங்காய் மற்றத் தேசங்களில் மானமடையுமென நம்ப இடமில்லை. எண்ணெய்க்கான அநேகம் பொருள்கள் இப்போது தேங்காய்க்கு எதிரிடையாக நிற்கின்றன. உணவு விஷயங்களுக்காகவே, துருவப்பட்ட தேங்காய் அந்நிய தேசங்களில் நன்கு வியாபாரமாகும். ஆனால், இற்றைவரை எமது தேங்காய்த் துருவலைப்பற்றி அந்நியநாடுகளில் போதிய பிரசாரங்கள் செய்யப்படவில்லை."

## பொதுச் செய்திகள்.

### கிழவியின் கஞ்சா வியாபாரம்.

கொழும்பு ஜிந்துப்பிட்டியில் வசிக்கும் மிஸிகேரு என்னும் ஓர் கிழவி சட்டவிரோதமாக 1 இருத்தல் கஞ்சா விற்றுவென்று கொழும்பு பொலீஸ் நீதிஸ்தலத்திற் சென்ற வெள்ளிக்கிழமை குற்றஞ் சாட்டப்பட்டாள். நீதிபதி அவளைக் குற்றவாளியெனக்கண்டு 150 ரூபா அபராதம் விதித்தார்.

### பொலிஸ் உத்தியோகஸ்தர் நிரபராதியானர்.

சென்ற நவம்பர்மீ 5உ உப பொலிஸ் தலைவராகிய மிஸ்டர் P. C. செல்வரத்தின மென்பவர் P. E. வண்டஸ் ஸாட்டன் என்பவரைத் தமது மோட்டார்தத்தினுல் தட்டி வீழ்த்தி கேரிததுக் கொண்ருர என்னுங் குற்றச் சாட்டின்பேரில் சென்றவாரம் கொழும்புச் சு. பிறீங்கோட்டில மூன்று நாட்களாக விளக்கப்பட்டு நிரபராதியெனக்கண்டு விடுதலையடைந்தார்.

### இன்னென்ருே?

மதுபரிபாலனப்பகுதி உதவி அதிகாரியான ஸ்ரீ ரீ. வீ. சரவணமுத்துவின் மனைவியான பேர்ல் கிறிஸ்றீன என்பவர், தனது நாயகன் தன்னை அடித்து வருத்துவதால் தான் இனிப் பிரிந்திருக்க வேண்டுமென்றும், தனது பிள்ளைகளும் தன பாதுகாப்பில் இருக்கவேண்டும் என்றும், மாதம் 450 ரூபா தனது கணவன் பராமரிப்புச் செலவு அளிக்க வேண்டுமென்றும் கொழும்பு நீதிஸ்தலத்தில் முறைப்பாடுகொடுத்திருக்கிருர். ஸ்ரீ ரீ. வீ. சரவணமுத்து மார்ச்சுமாதம் 27–ம் தேதி தமது மறுமொழியைக் கொடுப்பாரென்று அறிகிறேம்.

### நிலாவரையிற் படுகொலை. கனவு கண்டமனைவி.

சென்ற வெள்ளிக்கிழமை இரவு 12 மணியளவில் நிலாவரைக்குச் சமீபமாகப் புன்னலைக் கட்டுவனுக்குச் செல்லும் பாதையில், வெள்ளையன் முதலியென்றவன் படுகொலை செய்யப்பட்டதாகச் செய்தி கிடைத்துள்ளது. தேகத்தில் 11 வெட்டுக்காயங்கள் காணப்படுகின்றனவென்றும், முதலியென்பவனின் பெண் இரவு 12 மணியளவில் தனது புருஷனை யாரோ கொலைசெய்து விட்டதாகக் கனவு கண்டு அழுததாகவும் கூறப்படுகிறது. கொலை செய்தவன் யாரென்பது இன்னும் வெளிபடவில்லை.

முதலியின் பெண்ணுடன் சோர நட்புக்கொண்டிருந்த ஒருவனே இக்கொலையைச் செய்திருக்கவேண்டுமென்றும அவன் தலைமறைவாக இருக்கிருனென்றும் பலர் பேசிக்கொள்ளுகிருர்கள்.

### அராபியாவில் யுத்தம்.

அரேபியாவில் உள்ள இபின் சவுட் மன்னனுக்கும் யெமென்தேச இமாமுக்குமிடையில் சென்ற வியாழக்கிழமை தொடக்கம யுத்தம் ஏற்பட்டு மும்முரமாக நடந்து வருகிறது என்று ரியூற்றர் தந்திச் செய்தி ஒன்று கூறுகிறது.

### ஜப்பானிய எதிரிடையை ஒழிக்க.

சிலகாலமாக நடந்துவந்த ஆங்கில-ஜப்பானிய வர்த்தகப் பேச்சு முறிந்துவிட்டபடியால், இனி என்ன செய்வதென்று பாராளுமன்றத்தில்ஓர்பிரதிநிதிகேட்டார். அதற்கு அங்கிலநாட்டு வியாபார மந்திரியானவர் பின் வருமாறு விடைபகர்ந்தார்:

“நாம் கைகட்டிக்கொண்டு நடப்பதென்னவென்று இனிப்பார்த்துக் கொண்டிரோம். அப்படியிருந்தால் பிரிட்டிஷ் வர்த்தகம் ஒழிந்துபோம் என்பது நிசம். ஜப்பானியவர்த்தகத்தின எதிரிடையை யொழிக்கநாம் எம்மாலான எல்லா வற்றையுஞ் செய்வோம்.”

### அமெரிக்க-ஜப்பானிய நேசம்!

ஜப்பானுக்கும அமெரிக்காவுக்குமிடையே முன்னதெனச்சொல்லப்பட்ட மனக்கசப்பு ஒருவாறு நீங்கி அவ்விருநாடுகளுக்குமிடையே நேசப்பான்மை வளர்வதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. எந்த வல்லரசுக்கேனும் துன்பமும் தொந்தரவும் கொடுத்தல் தனது நோக்கமல்லவென்றும் முக்கியமாக அமெரிக்காவுடன் நேசப்பான்மையோடிருப்பதைத்தான மிக விரும்புகிறதென்றும், ஜப்பான் அமெரிக்காவிற்குத் தெரிவித்திருக்கிறது. இப்படித் தெரிவித்ததை தனக்கு மிகுந்த சந்தோஷம் அளித்திருக்கின்றதென்றும், மற்றைய தேசங்களுடன் அவற்றிலும் விசேஷமாக ஜப்பானுடன தனக்கு எப்போதும் நேசப்பான்மையிருக்குமெனவும் அமெரிக்கா பதில் அனுப்பியிருக்கிறது.

## பாரதஜோதி இராமக்கிருஷ்ணர்.

### ஜெகத் குருவாய் விளங்கிய தக்ஷிணேஸ்வர முனிவன்.

### கலியுகத்து மக்களுக்கேற்றற் கண்ணிய புருஷன்.

### இறைவனைத் தரிசித்து இன்பமெய்திய சீலன்.

### ஸ்ரீ மகாலிங்கசிவத்தின் சீரிய சொற்பொழிவு.



நேற்றையத்தினம் வண் - வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் ஸ்ரீ இராமக்கிருஷ்ண பரமஹம்ஸ தேவரது ஜெநந தின விழா மிக விமரிசையாகக் கொண்டாடப் பட்டது. காலை சுவாமிகள் திருவுருவப் படத்திற்குப் பூஜை முதலியன செய்யப்பட்டன பிற்பகல் 4½ மணி தொடக்கம் சங்கீதக்கச்சேரி முதலியன நடந்ததும் பொதுக் கூட்டம் 6 மணியளவில் ஸ்ரீமத் சுவாமி அலங்கானந்தா அவர்களின் தலைமையின் கீழ் ஆரம்பமாயது. கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலைப் போதகாசிரியர் ஸ்ரீ ம. வே. மகாலிங்கசிவம், பிரமஸ்ரீ வை. இராமசாமி சர்மா முதலியோர் ஸ்ரீ பரமஹம்சரது வாழ்க்கையைப் பற்றியும் வாழ்க்கையின் நோக்கத்தைப் பற்றியும் சொற்பொழி வாற்றினர்.

### ஸ்ரீ மகாலிங்கசிவத்தின் சொற்பொழிவு.

மேலைத்தேச நாகரிகம், பாரதநாட்டிற் புகுந்து அந்நாட்டின் பழைய மதாநுட்டானங்களையும், சமயக் கொள்கைகளையும் சிதறடிக்கத் தொடங்கியது; ஆங்கில நாகரிகத்தின் பாற்பட்டு, அதன் சாஸ்திரங்களைக் கற்ற பாரதநாட்டு அறிஞர்கள்—அவர்களிலும் பிரதானமாக வாலிபர் தமது புராதன ஹிந்துமதத்தின் கொள்கைகளின மீது வெறுப்புக்கொண்டனர். காலத்திற்கேற்றபடி ஹிந்து மதத்தை மாற்றவேண்டுமென அவர்கள் கங்கணம் கட்டி நின்றனர்; சுருங்கக் கூறுங்கால் ஹிந்துமதம் அழியுந் நிலையில் இருந்தது. இப்படியாகத் தர்மம் குன்றி அதர்மம் ஓங்கிய காலத்தில், மேநாட்டு நாகரிகம் என்னும் சூறைக்காற்ருல் பாரதநாடுதத்தழிக்கும்காலத்தில் ஸ்ரீ இராமக்கிருஷ்ணர் திருவவதாரம் செய்தருளினர்.

ஸ்ரீ இராமக்கிருஷ்ணரது ஜீவிய சரித்திரம் ஹிந்துக்களாயுள்ள எவர்க்கும் தெரிந்த தொன்ருகும். எனவே அதனைப் பற்றி நீண்டு விரித்துரைக்காது, அன்னவரின் வாழ்க்கையின் சில அம்சங்களையே மாத்திரம் ஈண்டுக் குறிப்பிடுதல் பொருந்தும்.

ஸ்ரீ பரமஹம்ஸர் பக்திமார்க்கத்தை நன்ருகக் கடைப்பிடித்து அந்த அகிலாண்டேஸ்வரியாம் காளிதேவியின் திருவருட்படியே கர்மம ஆற்றிவந்தார். அவர் தற்போதைய முறைப்படி எவ்வித் தியாசாலைக்கேனும் சென்று எப்பட்டமேனும் பெறவில்லை. ஆனுல், அந்த அகிலாண்டேஸ்வரியின் அருட்பிரவாகத்தில் அமிழ்ந்தியிருந்ததனுல் ஜெகத் குருவாக விளங்கினுர் என்றும் சொல்லலாம்.

ஆலயம் சென்று ‘சிவ சிவ” என்று கூறுவதால் மாத்திரம் இறைவனைக் காணமுடியாது. இந்த உலகில் உள்ள பொருள்கள் யாவற்றிலும், மக்கள் எவரிலும் இறைவன் உளன்; யாவும இறைவனின அம்சமே என உணரவேண்டும்; அப்படி உணர்ந்து ஒருவன கர்மம் ஆற்றுவானேயானுல், அவனே உண்மையில் இறைவனைக் கண்டவனுவான். இந்த உண்மையை ஸ்ரீ இராமக்கிருஷ்ணர் தமது இளம் பராயம தொடக்கமாக கன்குணர்ந்து கொண்டார்; அவரின் சமாதிக்குப பின்னர், நிலை நிறுத்தப்பட்டு உலகமெங்கணும் இருக்கும இராமக்கிருஷ்ண மடத்துச் சந்நியாசிகள தம குருநாதரின அடிச்சுவட்டைப் பின்பற்றி “எங்கடன் பணிசெய்து கிடப்பதே” என்றெண்ணி அல்லற்படும மக்களுக்குச் செய்துவரும் உதவிகள் நாம் எமகண்ணுறக் காண்பனவே!

ஸ்ரீ இராமக்கிருஷ்ணர் எம்மதத்திலேனும குரோதம பூண்டவரல்லர்; எம்மதமும் அவர்க்குச் சம்மதமே! ஆறுகள் பலவேறு இடங்களில் இருந்து வழ்றெடுத்து ஈற்றில் ஒரே சமுத்திரத்தில் விழும தன்மைபோல, சமயங்கள பல்வேருக இருப்பினும் அவையாவும் ஒரே லட்சியத்தையேயுடையனவாக இருக்கின்றன; இந்த உண்மையை ஸ்ரீ ராமக்கிருஷ்ண பரமஹம்சதேவர் தம அநுபவத்திற் கண்டார்; அவர் கிறிஸ்துவம மகமதியம் முதலாம் சமயங்களை அநுட்டித்து, அவையாவும ஒரே இறைவனையே அடைய வழி காட்டிகளாக நிற்கின்றன என்பதைக் கண்டார்.

அவருக்குத் துவைதம் அத்வைதம், வேதாந்தம், சித்தாந்தம் என்ற பேதம் இல்லை. எல்லாம் ஒன்றே. வைணவர்கள் அரியென்பதும், சைவர் சிவம் என்பதும், மகமதியர் அல்லாவென்பதும், கிறிஸ்துவர் தேவன் என்பதும் ஒன்றினையே. வீண்வாதம் செய்துவருவோர்களைப்பற்றி ஸ்ரீ இராமக்கிருஷ்ணர் பின்வரும் கதை மூலமாகக் கூறுவார்.

அதிகம் கல்வியறிவு படைத்த இருசட்டியார் ஒருமுறை வேதாந்தம் சரியோ, சித்தாந்தம சரியோ, துவைதம் சரியோ, அத்துவிதம் சரியோ என்று விவாதித்தனர்; இப்படி ஏன் விவாதிக்கின்றீர்கள் என விஷயமறிந்த ஒருவர் அவர்களை விசாரித்தபோது, இறைவனை அறிதற்காக, அவரைத் தரிசித்தற்காக விவாதிக்கின்ரும் என்ருர்கள். உடனே அவர்களை அவர் நோக்கி, “உங்களுக்குப் பசியிருக்கிறது; ஓர் தோட்டத்திற்குச் செல்கிறீர்கள்; அங்கே அழகிய மதுரமான கனிகள் நிறைந்த மாமரம் நிற்கின்றது; பசியைத் தீர்ப்பதற்காக உடனே கனிகளைப் பிடுங்கி உண்பீர்களா, அன்றேல் மரத்தின் கீழ் நின்று, இந்த மாமரம் ஏன் இப்படி வளர்ந்தது? இதற்கு இவ்வளவு கிளைகள் இருப்பக் காரணமென்ன? இதன் கனிகள் வட்டமாய் அல்லது நீளமாய் இராது இப்படியிருக்க நியாயமென்ன என்று கேட்பீர்களா? இது போலத்தான் பகவானை விசாரித்தறிதலும்; உண்மையான விசாரம் உங்களுக்கிருக்குமானுல், வீண் விவாதங்களில் ஈடுபடவேண்டாம்; பக்தியென்னும் வலையை விரியுங்கள்; இறைவன் என்ற மீன் நிச்சயமாய் அதில் அகப்படும்.

உலகத்திலே, இந்தக் கலியுகத்திலே தோன்றிய அவதார புருஷர்களுள் ஸ்ரீ இராமக்கிருஷ்ணரே மேன்மைபெற்றவர் என்று கூறல் மிகையாகாது. எமது ஹிந்துமதம் அந்நிய நாகரிகத்தால் தாக்கப்பட்டு அல்லற்படுங் காலத்தில் ஸ்ரீ இராமக்கிருஷ்ண பரமாத்மா அவதாரம் செய்திராவிட்டால், உண்மையில் எமது நிலைமை எப்படியாகுமோ என்ல் முடியாது.

அவரின் போதனைகளை எவரும் இலகுவில் அறிந்துகொள்ள முடியும்; வேதங்களின் உட்கருத்தை பகவத்கீதை எவ்வளவு துலாம்பரமாக விளக்கிற்ரோ, அதிலும் துலாம்பரமாக ஸ்ரீ இராமக்கிருஷ்ணர் அவற்றைத் தமது போதனைகள் மூலமாக விளக்கினுர் அவரின் போதனைகளே இப்போது நாம் கைக்கொள்ள வேண்டியது. எமது புராணங்கள் முதலியன சைவசமயத்திற்குச் செயற்கரும் சேவை புரிந்தன என்பது மெய் எனினும அவர்கள் நூல்கள் இப்போது எல்லோராலும் இலகுவில் விளங்கப்படத்தக்கனவல்ல.

ஸ்ரீ இராமக்கிருஷ்ணர் பகவத்தரிசனம் என்னும் ஆனந்தசாகரத்தில் அமிழ்ந்தியுள்ளவர்; “நான் எப்படி உன்னைக் காண்கின்றேனே, அதேபோல இறைவனையும் காண்கின்றேன்” என்று அவர் தமது சிஷ்யமணியான ஸ்ரீமத் சுவாமி விவேகானந்தருக்குக் கூறியமை ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாம். அத்தகைய மகான்மீது நாம் உண்மையான பக்தி பாராட்டுவது மெய்யானுல், இப்படி வருடந்தோறும கூடிப் பேசிவிட்டுப் போகவொண்ணுது. அன்னவரின் போதனைகளைச் சிரமேற்கொண்டு, அவற்றின்படி ஒழுகி எமது லட்சியத்தைப் பூர்த்தியாக்குவோமாக.

இதன்பின் ஸ்ரீ வை. இராமசாமி சர்மா அவர்களும் ஸ்ரீமத் சுவாமி அலங்கானந்தா அவர்களும் பரமஹம்ச தேவரது வாழ்க்கையைப்பற்றிப் பேசினர்.

### பின்னிற்க வேண்டாம்!

நமது தாய் நாட்டுச் சோதரர் பூகம்ப அநர்த்தத்தில் அகப்பட்டுக் கஷ்டப் படுவதைப் பற்றி நாடோறும் பத்திரிகைகளிற் படித்தும், அவர்களுக்கு உதவிசெய்ய முன்வர வேண்டாமா! இறந்த பல்லாயிரக்கணக்கானவர் போக, எஞ்சி யுள்ளோருக்கு ஊண், உடை, இல்லம் என்பனவற்றை அளித்தலில் உதாரத்துவத்திற் சிறந்த தமிழ் மக்களாகிய நாமும் பங்குபற்ற வேண்டாமா? ஆடவர்களே! பெண் மணிகளே, பாலியரே! உங்களுங்களால் இயன்ற தருமத்தை இந்த இந்துசாதனலயத்திற்கு அனுப்பி வையுங்கள். எச்சிறு தொகையேனும் உவந்தேற்றுக் கொள்ளப்படும். போம் பொழுது அருந்துணை புரிந்த புண்ணியம்.

மானேஜர்.

| | ரூ. ச. |
|---|---|
| முன்னர் உபகரிக்கப்பட்டது. | 1057 82 |
| மிஸ்டர் S. M. ஆனந்தம் | 5-00 |
| S. S. P. அருணப்பா | 5-00 |
| Dr. S. W. C. இரத்தினேசர் | 3-00 |
| ஹீ M. M. H. மரக்காயர். | 2-50 |
| ,, V. சரவணமுத்து | 2-00 |
| ,, A. K. ஆழ்வார்ப்பிள்ளை | 2-00 |
| ,, A. சந்திரசேகரம் | 2-00 |
| ,, S. கந்தையா | 2-00 |
| ,, A. L. சவுந்தரநாயகம் | 2-00 |
| ,, W. I. T. அழகரத்தினம் | 2-00 |
| ,, V. A. சழக்கோன் | 1-00 |
| ,, V. கந்தையா | 1-00 |
| ,, பெதலிசன். S. போல் | 1-00 |
| ,, P. தம்பிமுத்து | 1-00 |
| ,, J. லாண்டர்க்கோன் | 1-00 |
| ,, K. எம்பதூர்த்தி | 1-00 |
| ,, T. கைலாசபிள்ளை | 1-00 |
| ,, N. சதாசிவம் | 1-00 |
| C. A. சண்முகம் | 1-00 |
| C. ரத்தினம் | 1-00 |
| | 37 50 |
| ஆக ரூபா. | 1095-32. |

கோடைகாலத்திற் பீடிக்கும் தலைவலியைத் தவிப்பதற்காக ஒருபோதுங் கல்
ஷிட்டுலீஸ் ஓரியண்டல் பாம்
ஸ்தலங்கள்
வாங்கி வையுங்கள்.
இந்தியாவில் சிறந்ததும் பிரசித்தமானதும்.
(Y18. 11-2-33—31-3-34.)

அகில இலங்கை

## ஆதாய எலச் சீட்டுக் கம்பனி

**வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**

நீங்கள் இதுவரை ஈடுவைத்துள்ள
**காணிகளை மீள விரும்பின்**

எங்கள் கம்பனியில் 1000 ரூபாச் சீட்டிற் சேருங்கள்.

**மாதக் கட்டணம் 40 ரூபா;**
மாசம் 25 மாத்திரமே.

இக்கம்பனியொன்றே சீட்டைப்பெற்ற, பெருத இருபாலார்க்கும்
**கழிவுரிமையைக் கொடுத்திருக்கிறது.**

**T. Sellathamby,**
Manager.

(Y. 197. 8-2—7-2-35) (தி)

---

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை நான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாளு, சாலாமுஸ்லி, சப்பேமுஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த, செந்தூரம், சாம்பிராணிப்பதங்கம் இன்னும், அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனுல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்தன் உண்டாகிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரைருத்தலுக்கு ரூபா க0. கால்ருத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினுல் முன் மணிஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்.

க. ஆறுமுகம்பிள்ளை,
சி. ஞானஆரோக்கியசகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்று,
மட்டக்களப்பு

(Y 179. 1-1-34 to 31-12-34.) சிலோன்.

---

காலத்துக்குத்தக்க மலிவுவிலை!

## மங்களூர் ஓட்டுக் கம்பேனி.

**மிலிற்றறி, கவர்ன்மென்ட், முனிசிப்பல்**

**கொந்திருத்துக்காரர்.**

மோர்க்கன் ஓடு, 1931 தொடக்கம் வருஷக் கொந்திருத்தாய்
கவர்ன்மென்டுக்குக் கொடுக்கப்பெற்று வருகின்றது.

வேறு எந்த ஓட்டிலும் இல்லாத இரண்டு வரைகள் மோர்க்கன் ஓட்டில் இருக்கின்றன. இவை அடைமழைக்கும் ஓட்டைக் கசியவிடாது காத்துகொள்ளும்

பத்துப் பதக்கம் பரிசுபெற்று, மற்ற எல்லா ஓட்டிலும் பார்க்க, அதிகம் இடத்தை மூடக்கூடிய எங்கள் தங்கமேடல் ஓடுகள் (Secretariat, State Council Chamber) இராசாங்கப் பெரிய கந்தோர்கள், கவுன்சில் மண்டபம் முதலிய கட்டிடங்களுக்குப் பாவிக்கப்பெற்று வருகின்றன.

தலைநகரக் கந்தோர்:–64-ம் நி-ர். ஆதிருப்பள்ளித்தெரு,
கொழும்பு.

க. சே. த. சே. செல்லையாபிள்ளை:-316–ம் நி-ர். கிட்டங்கித்
தெரு, யாழ்ப்பாணம்.

சோமசுந்தர முதலியார் வளவு:-வில்லூன்றி. திருக்கோணமலை.

**W. B S.** தர்ம சூரிய:-பெட்டிக்கலவத்தை, காலி.

பல இடங்களுக்கும்போய், எங்கள் ஓடுகளை விற்க ஏசென்ருய் சுன்னுகம் இ. தாமோதரம்பிள்ளை நியமிக்கப் பெற்றிருக்கின்ருர்.

Y. 2. 31-3-34.)

---

## N. வைத்திலிங்கம் & கம்பெனி

**பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.**

கட்டிடங்களுக்குவேண்டிய முதல்தரமான சாமான்கள்.

ஜெர்மனி, ஜப்பான், டச்சு
முதலியவிடங்களில் செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள
சீமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள்
வர்ணங்கள், வார்னிஷ், கொழுக்கி ஓடுகள்
இன்னும் கட்டிடத்திற்குரிய சகல சாமான்களும்
எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால்
சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE:
38, 3rd Cross Street,
Colombo.

**Telephone No. 30.**

(Y. 201. 8-2—7-2 35) த

---

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி.

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரா மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 129777 00.

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

**பங்குப்பணங் கட்டுமுறை.**

பங்கொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறுங் கட்டப்படவேண்டியது குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு.**

எச்சமிதி சாரசரி 500 ரூபாயிற்குக் குறையாமல் இருக்குமானுல் 3 விகித வட்டியுடன் தினசரிப்பற்றுவரவு செய்யலாகும்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.**

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்த ஏற்படும் வட்டியும் முறையே 3 விகிதம், 4 விகிதம், 6 விகிதம், 8 விகிதமாகக் கொடுக்கப்படும்

**உண்டியல்கள்.**

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப்பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன

இந்தியநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

**கடன்.**

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறுங் கட்டுபவர்களுக்கு 10 விகிதமான வட்டியும், ஏனையோர்க்கு 12 விகிதமான வட்டியும் விதிக்கப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாக் கொடுக்கலாம்.

காணி ஈடாக வைத்துக்கொண்டு பிணையுடன் கடனெடுக்கலாம். (இந்தக்கடனையும் பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாகும்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

சி. செல்லப்பா.
மானேஜர்.

(Y.143 21-11-33.—20-11-34) (த.)

---

## கியாத நாத மணிகள்.



தேவாலயங்களிலும், வித்தியாலயங்களிலும் உபயோகப்படத்தக்க, காதுக்கினிய ஓசையோடுகூடிய "கியாத நாத மணிகள்" சிறுமணி தொடக்கம் மிகப் பெரிய மணி வரையில் எங்களிடத்தில் எந்தநேரமும் பெறத்தக்கன. இன்னும் விரும்பியவர்கள் தங்களுக்கு வேண்டிய மணியின் பிரமாணத்தையும் நிறையையுந்தெரிவித்தால், ஒருகுறித்த தவணைக்குள் தவருமற் செய்துகொடுக்க ஆயத்தமாயிருக்கின்றேம். எங்கள் தொழிற்சாலையில் ஆக்கப்பட்ட மணிகளையாழ்ப்பாணத்திற பல இடங்களிலும் இலங்கையின் ஏனைய பாகங்களிலும் அதிகமாக உபயோகிக்கப் படுகின்றன.

S. A தம்பிப்பிள்ளை & சன்ஸ்,
நல்லூர்.

(Y. 74. 26-2—25-8 34.) தி-

---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

---

Printed and Published by S. ADCHALINGAM, residing at Ayanarkovilady, Van: West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Thursday 22, March 1934.